நமது முரசு
NAMATHU MURASU
தமிழ் மக்களின் நாடித்துடிப்பு
மாலை நாளிதழ்
புதுச்சேரி Puducherry 20.11.2024 புதன்கிழமை Wednesday Volume : 19 Issue:291 PAGE 6 Rs:7 குரோதி ஆண்டு கார்த்திகை 5ஆம் தேதி

உலக செயல்முறை மருத்துவ தினம்: முதியோர்களுக்கு விழிப்புணர்வு

புதுச்சேரி, நவ.20- புதுவை ஜிப்மரில் உலக செயல்முறை மருத்துவ தினத்தை யொட்டி அனைவருக்கும் செயல்முறை மருத்துவ சிகிச்சை என்ற கருத்தை மையமாக வைத்து பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

இதன் ஒரு பகுதியாக ஜிப்மர் ஊழியர்கள், மாணவர்களுக்கு பணிச்சூழலியல் குறித்த ஆலோசனை வழங்கப்பட்டது. ராமநாதபுரம் கிராமப்புற சுகாதார நிலையத்தில் ஒரு நாள் மருத்துவ முகாம் நடத்தப்பட்டது.

இதில் புனர்வாழ்வு மருத்துவத்துறை தலைவர் நவீன்குமார், ராமநாதபுரம் கிராமப்புற சுகாதார நிலைய தலைமை மருத்துவர் பிரதீபா அகர்வால், மூத்த செயல்முறை மருத்துவர் சதீஷ்குமார் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதில் 40 ஊழியர்கள், 150-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பங்கேற்று பயன்பெற்றனர். தொடர்ந்து குருசுகுப்பத்தில் உள்ள ஜிப்மர் நகர்ப்புற சுகாதார நிலையத்தில் முதியோர், பெண்களுக்கான உடல்நல விழிப்புணர்வு முகாம் நடந்தது.

இதில் நோய்தடுப்பு துறை பேராசிரியர் வெங்கடாசலம் தனசீலன், புனர்வாழ்வு துறை பேராசிரியர் பத்மபிரியதர்ஷினி, மூத்த மருத்துவ அதிகாரி தேவன், மூத்த செயல்முறை மருத்துவர் சதீஷ்குமார் உட்பட பலர் கலந்துகொண்டனர்.